Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 171

செவ்வாய்க்கிழமை 16 மே 2023

வைகாசி 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்துங்கள்!!!

## இடைக்கால நிர்வாக சபை யோசனையை விக்கி - ரணில் கூட்டாக முன்மொழிவு

## அதிகாரப் பகிர்வு, தேர்தல் விவகாரங்களை ஆராய ரணிலால் குழு நியமனம்

யாழ்ப்பாணம், மே 16

தேர்தலை நடத்தி மாகாணசபையை செயலுருப்படுத்தவேண்டும் என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று வலியுறுத்தினர். ஆனால், ரணில் விக்கிரமசிங்க அதற்கு நேரடியாக இணக்கம் தெரிவிக்கவில்லை. இதேவேளை இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனையை நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணைந்து முன்வைத்தபோதும் அதனை ஒட்டுமொத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிராகரித்தனர். »11

வடக்கு உட்பட

## மூன்று மாகாண ஆளுநர்கள் நேற்றுப் பதவி நீக்கப்பட்டனர்

### வடக்கின் புதிய ஆளுநராக மீண்டும் பி.எஸ்.எம். சாள்ஸ்?

கொழும்பு, மே 16
வடக்கு - கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் உடனடியாக நேற்று நடைமுறைக்குவரும் வகையில் ஜனாதிபதி »11

## ஆளுநர்கள் நியமனம்; சவாலுக்குட்படுத்தோம்

### பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, மே 16
ஆளுநர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை எமது கட்சி சவாலுக்குட்படுத்தாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலர் சாகர »10

## உறவுகளைத் தனித்தனியே தமிழ் மக்கள் நினைவேந்தலாம்

### கூறுகிறார் மஹிந்த



கொழும்பு, மே 16
போரில் உயிர் நீத்த உங்கள் உறவுகளை, உறவுகள் என்ற ரீதியில் நீங்கள் தனித்தனியே நினைவேந்துங்கள் - இவ்வாறு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- »10

## குளவி கொட்டியதில் இளம் தாய் சாவு!

யாழ்ப்பாணம், மே 16
வீட்டின் பின்புறத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது குளவி கொட்டியதில் இளம் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மௌலி சபானா (வயது - 28) என்பவரே இவ்வாறு நேற்று உயிரிழந்துள்ளார். இவருக்கு இரு »11

காட்டுக்குள் இழுத்துச்சென்று

## குடும்பப்பெண் மீது வன்புணர்வு முயற்சி

### இராணுவக் காவலரணுக்கு அருகில் மணலாற்றில் நேற்றுச் சம்பவம்

முல்லைத்தீவு, மே 16
கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் 32 வயதான குடும்பப் பெண்ணை காட்டுக்குள் இழுத்துச்சென்று பாலியல்வன் »11

யாழ். பல்கலைக்கழக

## மருத்துவபீடத்தினுள் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 16
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் வடக்கு - கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. »11

## முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்த இரு பொலிஸாருக்குச் சிக்கல்

கிளிநொச்சி, மே 16
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் குடித்த கிளிநொச்சி »11

## உறவுகளை வீட்டுக்குள் நினைவேந்தலாமே?

### ஊர்திப்பவனி, கஞ்சி வழங்கல் எதற்கு என்கிறார் சரத் வீரசேகர

யாழ்ப்பாணம், மே 16
போரில் இறந்த உறவுகளை வீட்டுக்குள் நினைவு கூரலாம். ஊர்திப்பவனி, கஞ்சி வழங்கல், விளக்கேற்றல் எதுவும் தேவையில்லை. »10

## உருத்திரபுரீஸ்வர ஆலயத்தினுள் பௌத்த ஆக்கிரமிப்பை அனுமதியோம்!

### வியாழனன்று போராட்டத்துக்கு முன்னணியும் ஆதரவு

கிளிநொச்சி, மே 16
வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து சைவ ஆலயமாக விளங்கிய உருத்திரபுரீஸ்வரர் ஆலயச்சூழலில் தொல்லியல் திணைக்களம் அளவீட்டுப் பணிகளை மேற்கொண்டு பௌத்தத்துக்கு ஆக்கிரமிக்க எடுக்கும் முயற்சி »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது
ரூ.120,000/=
அதிகபட்ச இரகசியதன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
செலான் தங்கக்கடன்
Fitch Rating: "A -" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்திருத்தத்தைக் காரணம்காட்டி தேர்தலைப் பிற்போடமுடியாது!

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

வவுனியா, மே 16

**தேர்தல் முறையில் சீர்திருத்தம் செய்வது நல்ல விடயம். ஆனால் சீர்திருத்தம் இன்னும் செய்யவில்லை என்ற காரணத்துக்காகத் தேர்தலை நடத்தாமல் இருப்பது தவறான விடயம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக்கட்சியின் யாப்பில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பாக பேசியிருக்கிறோம்.

அது தொடர்பில் நீண்ட காலமாகப் பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை உள்ளடக்குவதுடன். புதிய திருத்தங்களைச் சேர்ப்பதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான விடயங்கள் இன்று சபையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்துள்ளோம்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். வெறுமனே சடங்களைத் திருத்திவிட்டு மாகாணசபைகள் இயங்காமல் விட்டால் அதில் அர்த்தமில்லை. ஓர் அரசாங்கம் செய்யவேண்டிய விடயத்தை ஒரு கட்சிசெய்துள்ளது.

தனிநபர் சட்டமூலம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கின்றேன். அதனை சிங்களத் தரப்பைச் சேர்ந்த இருவர் சவாலுக்குட்படுத்தியதுடன் உச்சநீதிமன்றத்தில் அது தொடர்பில் ஒரு விவாதம் இடம்பெற்றது. அதனடிப்படையில் உச்சநீதிமன்றம் இது தொடர்பான தீர்ப்பை நாடாளுமன்றுக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிக்கும்.

இந்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்தினால் மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தமுடியும். அப்படி நடத்தும்போது பழைய தேர்தல் முறையிலேயே நடத்தலாம். தேர்தல் முறையில் சீர்திருத்தம் செய்வது நல்ல விடயம். ஆனால், சீர்திருத்தம் இன்னும் செய்யவில்லை என்ற காரணத்துக்காக தேர்தலை நடத்தாமல் இருப்பது தவறான விடயம். எனவே, தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையான வாக்குரிமையை அரசாங்கம் மறுதலிக்கக்கூடாது - என்றார் (ம-110)

# மீளவும் பிரமிட் மோசடிகள்; மத்திய வங்கி எச்சரிக்கை!

கொழும்பு, மே 16

பிரமிட் மோசடிகள் தொடர்பில் கடந்த நான்கு மாதங்களில் 30 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்தப் பொது முறைப்பாடுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இலங்கைப் பொலிஸார் முறையான விசாரணைகளை மேற்கொண்டு சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களை தண்டிப்பார்கள் என்றும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரமிட் திட்டங்களில் பணத்தை முதலீடு செய்வது உட்பட பல நிதிக் குற்றங்கள் மற்றும் சட்டவிரோத திட்டங்கள் உள்ளன. பிரமிட் வகை நிதி மோசடிகளில் ஈடுபடுவது 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். (எ-இ)

# ராஜபக்சக்களை மீண்டும் ஆட்சிப்பீடமேற்ற முயற்சி

## ரத்ன தேரர் குற்றச்சாட்டு

2024ஆம் ஆண்டு ரணில் ஜனாதிபதி, பஸில் ராஜபக்ச பிரதமர் என்ற நிலைப்பாட்டுக்குள் இருந்துகொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான தரப்பினர் செயற்படுகிறார்கள். ஆனால் இந்த இருவரின் ஆட்சியை நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தபோது எவரும் அரசாங்கத்தை ஏற்க முன்வரவில்லை என ஆளும் தரப்பினர் கூறுவது அடிப்படையற்றது. நாட்டு மக்கள் ராஜபக்சக்களை முழுமையாகப் புறக்கணித்த பின்னணியில், ராஜபக்சக்களைப் பாதுகாப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மக்களால் கடுமையாக வெறுக்கப்பட்ட ராஜபக்சக்கள் மீண்டும் மக்கள் மத்தியில் செல்வதற்கான பாதுகாப்பான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேசிய தேர்தல் தொடர்பில் ராஜபக்ச குடும்பத்துக்குள் நான்கு வேறுபட்ட நிலைப்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்கவும், அதே ஆண்டு இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் பஸில் ராஜபக்சவை பிரதமர் வேட்பாளராக களமிறக்கவும் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். 2019ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் செய்த தவறை மக்கள் மீண்டும் செய்யமாட்டார்கள் - என்றார். (எ-இ)

# தீவிரமாகும் டெங்குத் தொற்று 14 நாளில் 4,000 தொற்றாளர்கள்

கொழும்பு, மே 16

இந்த மாதத்தின் முதல் இரு வாரங்களுக்குள் சுமார் 4 ஆயிரம் டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இது டெங்கு தொடர்பான மிக ஆபத்தான நிலைமையைக் காட்டுகின்றது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இதுவரை 33 ஆயிரத்து 656 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்குத் தொற்றுக்குள்ளான 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை நுளம்புகளின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கச் செய்யும். இந்த மாதத்தின் முதலாவது வாரத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நாடு முழுவதும் ஆயிரத்து 954 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு தேசிய மருத்துவமனை, நீர்கொழும்பு மாவட்ட பொது மருத்துவமனை, தொற்று நோய் மருத்துவமனை, கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனை (களுபோவில), லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை, கண்டி தேசிய போதனா மருத்துவமனை மற்றும் திருகோணமலை பொது மருத்துவமனை ஆகியவற்றில் அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (எ-இ)

# மஹிந்த பதவியேற்க மனோவும் ஆதரவு!

கொழும்பு, மே 16

மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமியுங்கள். அது தொடர்பில் எமக்கு எந்தச் சிக்கலும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பதவிகளுக்கான நியமனங்கள் எதுவாக இருந்தாலும், நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்களின் ஆதரவு யாருக்கு இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாம் அனைத்துக்கும் தயாராகவே இருக்கின்றோம், நாம் தேர்தலில் வெற்றி பெறுவோம் - என்றார். (எ-இ)

# ஒரு லட்சம் மருந்துகள் சட்டவிரோத இறக்குமதி

கொழும்பு, மே 16

தரமற்ற மயக்க மருந்துகளை உள்ளடக்கிய ஒரு லட்சம் குப்பிகள் பயன்பாட்டிலிருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளன என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த மருந்துகளைப் பயன்படுத்தும்போது நோயாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்களை கருத்திற்கொண்டு அவை பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன என்று அந்தக் கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இந்த மருந்து இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மருந்து அல்ல என்பதை தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தற்போது உறுதிப்படுத்தியுள்ளது. அத்தகைய மருந்தை நோயாளிகளுக்கு வழங்கமுடியாது.

இந்தச் சம்பவம் உட்பட மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கடன் மறுசீரமைப்பில்

# அரசின் தன்னிச்சைப் போக்கு பெரும் விளைவை ஏற்படுத்தும்

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

**கொழும்பு, மே 16**

**தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் பிரதானமாக நிதியமைச்சு தன்னிச்சையாகச் செயற்படக்கூடாது. தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெறும் பிரச்சினைகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய அணியினர் ஆட்சியில் இருக்கும்வரை சர்வதேச நாணய நிதியம் அல்ல முழு உலகமும் ஒத்துழைப்பு வழங்கினாலும் பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள முடியாது. நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள நிலையிலும் ஊழல் மோசடி முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை.

சுனாமி, கொவிட், எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய விவகாரங்களில் கொள்ளையடித்தவர்கள் 10 கிலோகிராம் அரிசி விநியோகத்தையும் விட்டு வைக்கவில்லை. 10 கிலோகிராம் அரிசிப் பொதி ஒன்றின் ஊடாக 10 ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. உண்மையில் வெட்கித் தலைகுனிய வேண்டிய செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடுகிறது. தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தை அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் தொழில்நுட்ப ரீதியில் ஆராய வேண்டும். பொருளாதார மீட்சிக்காகவே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புப் பெறப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை மற்றும் முன்வைக்கப்படும் நிபந்தனைகள் தொடர்பான நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். தேசிய கடன்களை மறுசீரமைக்கும் போது ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் உட்பட வங்கிக் கட்டமைப்பு ஆகியவற்றுக்கு ஏதாவதொரு வகையில் பாதிப்பு ஏற்படும் என்பதே உண்மை.

இந்தவிடயத்தில் அரசாங்கம் நாட்டு மக்களிடம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் - என்றார். (ஏ-இ)

## ஈ.பி.எவ், ஈ.ரி.எவ். பாதிக்காமல் தேசிய கடன் மறுசீரமைப்பு!

### சர்வதேச நாணய நிதியத்திடம் வலியுறுத்து

கொழும்பு. மே 16

தேசிய கடன் மறுசீரமைப்பின்போது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படுத்தாமல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தோம் என்று தெரிவித்துள்ளார் பேராசிரியர் அனுர ஷான்த்த ஆராய்ச்சி.

நாட்டுக்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிறிஷ்ணா சீனிவாசன் உள்ளிட்ட பிரதிநிதிகளை கடந்த சனிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு மிகவும் வெற்றிகரமாக முடிந்தது என்றே நாங்கள் நம்புகிறோம். அரசாங்கம் புதிதாக விதித்திருக்கும் 400 வீத வரி அதிகரிப்புத் தொடர்பில் நாங்கள் அவர்களுக்கு விளக்கமளித்தோம். அவர்கள் இந்த வரி அதிகரிப்பு ஒரே தடவையில் அதிகரிக்கப்பட்டிருப்பது தொடர்பில் ஆச்சரியப்பட்டனர்.

சர்வதேச கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளும் போது தேசிய கடன் மறுசீரமைப்பும் மேற்கொள்ளப்பட வேண்டி ஏற்படுகிறது என்று அவர்கள் குறிப்பிட்டனர். இந்த நாட்டின் தொழிலாளர்களின் ஓய்வூதியத்தில் எந்தக் குறைப்பும் செய்யவேண்டாம் எனவும் அதேபோன்று கடன் மறுசீரமைப்பின்போது வங்கிகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புத் தொடர்பாகவும் தெரிவித்தோம். எமது கோரிக்கைகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் என்று நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எமக்குத் தெரிவித்தனர் - என்றார். (ஏ-இ)

## வேலையற்ற இளைஞர்களுக்கு மானிய வட்டி விவசாயக் கடன்

வேலையற்ற இளைஞர்கள், விவசாய நடவடிக்கைகளுக்காக மானிய வட்டி வீதத்துடன் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக அரச வங்கிகளில் கடன்பெறமுடியாத விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இளைஞர்களிடையே இதுபோன்ற முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையிலும், ஏற்கனவே இதுபோன்ற செயல்களில் ஆர்வமுள்ளவர்களுக்கு சொந்தமாக பண்ணை அல்லது கால்நடை வளர்ப்பை அனுமதிக்கும் முயற்சியாகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ-இ)

## இலங்கையில் அதிகரித்தது கணினிக் கல்வியறிவு வீதம்

2022ஆம் ஆண்டில் இலங்கையின் கணினிக் கல்வியறிவு வீதம் 35.7 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று தேசிய தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திணைக்களத் தரவுகளுக்கு அமைய 2021ஆம் ஆண்டு 35 சதவீதமாகக் காணப்பட்ட கல்வியறிவு 0.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், 2020ஆம் ஆண்டு 32 சதவீதத்திலிருந்து 3.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2022ஆம் ஆண்டு இலங்கையில் நகர்ப்புற மக்களிடையே கணினிக் கல்வியறிவு வீதம் 49.1 சதவீதமாகவும் கிராமப்புற மக்களிடையே 34.2 சதவீதமாகவும் உள்ளது என்று தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன என்றும் திணைக்களம் தெரிவிக்கிறது. (ஏ-இ)




**வியாபாரத்துக்கு விளம்பரமும் முக்கியம். ஒரு கொம்பனி தன்னைப் பற்றியும், தான் உற்பத்தி செய்யிற பொருள்களைப் பற்றியும் சனத்திட்ட பேமஸாக்கி, விற்பனையையும் லாபத்தையும் கூட்டுறதுக்கு விளம்பரங்கள் தான் உதவுது. பேப்பர், ரேடியோ, ரீவி எண்டு இருந்த விளம்பரங்கள் இப்ப பேஸ்புக், வட்ஸப் எண்டு எல்லா இடத்திலையும் செய்படுகுது. பெரிய மீடியாக்களில விளம்பரம் செய்யக் காசு வேணும் எண்டதால, சின்னச் சின்ன உற்பத்தியளைச் செய்யிறவை தங்கட பேஸ்புக் எக்கவுண்டிலயோ, இல்லாட்டி வட்ஸப் குரூப்பிலையோ அந்த உற்பத்தியளை விளம்பரப்படுத்துகினம். இதால காசும் மிச்சம், விளம்பரத்தை ஆரெல்லாம் பார்த்தவை எண்டும் கண்டுபிடிக்கலாம்.**

**இப்பிடி வட்ஸப்பில தங்கட 'கொம்பனியைப்' பற்றி விளம்பரம் செய்து, பிஸ்னஸ் செய்த ரண்டு தரப்பை நெல்லியடியிலையும், பூம்புகாரிலையும் பொலிஸ் பிடிச்சிருக்குது. அப்பிடி பொலிஸ் பிடிக்கிற அளவுக்கு அவையின்ர பிஸ்னஸ் என்ன எண்டு யோசிப்பியள். வேறயொண்டுமில்லை, பத்து இருபது பேர் ஒண்டாகி தங்களுக்கு ஒரு பேரை வைச்சு, முகத்தை மூடிக்கட்டி, வெளிநாட்டில இருந்து ஆரும் காசு அனுப்பினால், அந்தக் காசுக்கு வஞ்சகம் செய்யாமல் அவை கைகாட்டுற ஆக்களின்ர கை, காலை முறிக்கிறதுதான் இவையின்ர பிஸ்னஸ். இப்பிடியான 'சிறுதொழில் முயற்சியாளர்களைத்தான்' பொலிஸ் பிடிச்சிருக்கு. முந்தியெண்டால் இப்பிடியான வேலைக்கு வாள், கம்பி, பொல்லு இதுகளைத்தான் கொண்டுபோவினம். இப்ப அதுகளை மறந்தாலும் போனைத்தான் மறக்காமல் முதலே எடுத்து வைக்கினமாம். ஏனெண்டால் நாலைஞ்சு பேர் ஒரு அப்பாவியைப் போட்டு அடிக்கிறதை, அவையின்ர குரூப்பில ஒராள் போனில வீடியோ எடுத்து அதை ரிக்ரொக், வட்ஸப் எண்டு போடுவினம்.**

**அப்பிடி வட்ஸப் குரூப்பில போடுறதுக்கு ரண்டு காரணம் இருக்காம். ஒண்டு, தங்களுக்கு 'ஓர்டர்' தந்த ஆக்கள் செய்த வேலையைப் பார்த்து திருப்திப்பட. இன்னொண்டு, இப்பிடியான வீடியோக்களைப் பார்த்திட்டு வெளிநாட்டில உள்ளவை, தங்களுக்கு எதிரான ஆக்களுக்கு அடிக்கவும் எந்தக் கும்பல்களைப் பிடிப்பினமாம். எந்தக் கும்பல் கூட அடிக்குதோ, எந்தக் கும்பல் கூடுதலா வீடியோ போடுதோ அந்தக் கும்பலுக்குத்தான் மார்கெட் கூடவாம். அதால ஒவ்வொரு குரூப்பும் தங்கட அடிதடி வீடியோக்களை எடுத்துத்தள்ளி, வட்ஸப் குரூப்பில தெறிக்கவிடுகினம். எதெதுக்கு விளம்பரம் செய்யினம் எண்டு பாத்தியளே. எல்லாம் 'அவங்கள்' இல்லாத குறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதினிப் படுகொலை: நேற்று நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 16

**குமுதினிப் படுகொலையின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவில் இடம்பெற்றது.**



குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் நினைவாக நெடுந்தீவு இறங்குதுறையிலுள்ள நினைவாலய வளாகத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது. இறந்தோரின் ஆத்ம சாந்திக்காக, காலை 8.15 மணிக்கு நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. சமநேரத்தில் மாவிலித் துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு குமுதினிப் படுகொலை நினைவேந்தல் குழுமத்தின் நெடுந்தீவு பிரதேச தலைவர் வி.ருத்திரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. நினைவுத்தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் குருதியின் குமுறல்கள் என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது. நிகழ்வின் ஒருபகுதியாக முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு, முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியும் பரிமாறப்பட்டது.

1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் குமுதினிப் படகு பயணித்துக் கொண்டிருந்தவேளை, இலங்கைக் கடற்படையால் அந்தப் படகு நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 36 பேர் வெட்டிக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-20)



## கொட்டித் தீர்க்கும் கனமழையால் தெற்கில் பல இடங்களில் வெள்ளம்

கொழும்பு, மே 16

நாட்டின் பல பகுதியில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நில்வள கங்கை மற்றும் கிங் கங்கை பெருக்கெடுத்துள்ளன. இதனால் மாத்தறை மாவட்டத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

தவலம, நெலுவ, மொரவக, அக்குரஸ்ஸ, அத்துரலிய, பிடபெத்தர மற்றும் கொட்டபொல ஆகிய தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நெலுவ மற்றும் ஹப்பிட்டிய பகுதிகளில் உள்ள தாழ்நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தெனிய அக்குரஸ்ஸ வீதியில் பல மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதால் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. நெலுவ - மொரவக பிரதான வீதியில் அலபலதெனிய பிரதேசத்தில் மண் மேடு சரிந்துள்ளதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. அக்குரஸ்ஸ தவலம பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

தென் மாகாணத்தில் பெய்துவரும் கடும் மழையால் கிரமாரா நீர்த்தேக்கம் நிரம்பியுள்ளது. தெய்யந்தர, சீனிபல்ல, மாகதுர மற்றும் ஆதபான ஆகிய பிரதேசங்களில் உள்ள கிரமாரா நீர்த்தேக்கத்தின் இருபுறங்களிலும் உள்ள மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று மாத்தறை மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (எ-இ)

## 5 லீற்றர் கோடாவுடன் நபரொருவர் கைது

யாழ்ப்பாணம், மே 16

5 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் ஊரெழுவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுகின்றது என்று கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபருக்கு 42 வயது என்றும் அவர் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-125)

## உடைமையில் கசிப்பு; சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம். மே 16

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளதுடன், அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி.125)

## வவுனியாவில் நேற்று சடலமொன்று மீட்பு!

வவுனியா, மே 16

வவுனியா நகரப்பகுதியில் நேற்றையதினம் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா பழையபேருந்து நிலையத்துக்கு முன்பாக சடலம் ஒன்று கிடப்பதாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படாதநிலையில், அவர் அந்தப் பகுதியில் இருக்கும் ஆதரவற்ற ஒருவராக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-110.18)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 16

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச.நவநீதன் 'சிவ வேடமிட்ட சிவனடியார் அழுக்குத் துணியைத் துவைத்த நாயனார்' என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். (எ-ரி)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உ றவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற் கொள்ளவேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். மனதில் தைரியம் அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். எதிரிகளால் பிரச்சினை ஏற்படும் என்பதால், கவனமாக இருக்கவும்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அஞ்சலிப்பு எப்படி வெறுப்பேற்றும்?

நினைவேந்தல் செய்வதற்கு அனைத்து மக்களுக்கும் உரிமையுண்டு. ஆனால், இன்னோர் இனத்தை வெறுப்பேற்றும் வகையில் அந்த நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்படக்கூடாது என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. மூத்த அரசியல் தலைவராக – நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக – ஆகச் சிறந்த கல்விமான்களில் ஒருவராகத் திகழும் ரணில் விக்கிரமசிங்க, தன்னிலைக்கு இம்மியும் பொருந்தாத வகையில், நினைவேந்தல் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நினைவேந்தல்கள் என்பவை கொண்டாட்டங்கள் அல்ல. அவை அஞ்சலிப்புக்களுடன் இரண்டறக் கலந்தவை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் அத்தகையதே. இறுதிப்போரின்போது கொத்துக்கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட தமது உறவுகளை – உயிருக்கு நிகரானவர்களையே தமிழர்கள் மே 18 ஆம் நாளில் அஞ்சலிக்கின்றனர். இறந்தோரை நினைந்து மனம் வெதும்புகின்றனர், கண்ணீர் சிந்துகின்றனர். ஆதலால், இவ்வாறாக உயிரிழந்த ஆத்மாக்களை நினைந்துருகுவதானது எவ்வாறு இன்னோர் இனத்தைக் காயப்படுத்தும் செயலாக – வெறுப்பேற்றும் செயலாக அமையும்? என்ற கேள்வி இங்கே இயல்பாகவே எழுகின்றது.

'மரணச்சடங்குகளை மேற்கொள்ளுங்கள். ஆனால், அந்த மரணச் சடங்கு இன்னொருவரை வெறுப்பேற்றும் வகையில் அமையக்கூடாது' என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய அர்த்தப்பிழை. இதற்கு நிகர் நேரான கருத்துத்தான் ஜனாதிபதி ரணிலுடைய கருத்தும். ஆக,தமிழர்கள்முன்னெடுக்கும்நினைவேந்தல்கள் இன்னொரு இனத்தை கோபம்கொள்ளச் செய்யும் என்றால், ஜனாதிபதி வெளிப்படுத்த முனையும் கருத்தின் ஆழமும் அர்த்தமும் ஆகப்பெரும் அபத்தமானது. இது கண்டிக்கப்பட வேண்டியதுடன், இதற்குப் பலமான எதிர்ப்பை தமிழ்த் தலைவர்கள் பதிவுசெய்வதும் காலத் தேவையானது.

இலங்கையிலிருந்து இனவாதம் துடைத்தெறியப்படவேண்டுமாயின், இலங்கை நிலையான அபிவிருத்தியிலும் நீடித்த சகோதரத்துவ நல்லிணக்கத்திலும் பயணப்பட வேண்டுமாயின் இந்த அஞ்சலி நிகழ்வுகள் மிகமிக அவசியமானவை. இன்னும் சொல்லப்போனால், இந்த அஞ்சலிப்புக்கள் அரசாங்கத்தால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்படவேண்டியவையாக அமைகின்றன. ஒரு பகைமை முடிந்து சுமுக நிலை வரவேண்டுமாயின் காயமடைந்தவனுக்கு மருந்திடல் அவசியம். இலங்கையில் நிலவும் இனப்பகைமைக்கான மருந்திடலாக இந்த அஞ்சலி நிகழ்வையும் கொள்ளலாம். ஆனால், இந்தப் புதியதொரு கலாசாரத்துக்கான குறைந்தபட்ச அணுகலும், அதற்குரிய சிந்தனையும் அரசாங்கத்திடம் இல்லை. இனியும் அந்த எண்ணவோட்டம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

ஓர் அஞ்சலிப்பைக்கூட சகித்துக்கொள்ள முடியாத சிங்கள தேசம், எவ்வாறு இறுதிப்போரின்போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இனப்படுகொலைகளுக்கும் போர்க்குற்றங்களுக்கும் நீதியைத் தந்துவிடும்? தென்னாபிரிக்காவை மாதிரியாகக் கொண்டு, உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு இலங்கையின் இனப்பிரச்சினை கையாளப்படும் என்று சர்வதேசத்திடம் தெரிவித்து, 'விலாங்கு மீன்' விளையாட்டில் ஈடுபடும் ரணில் அரசாங்கம், இனப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னர், காயமடைந்தவர்களின் மனங்களுக்கு தென்னாபிரிக்கா எவ்வாறு மருந்திட்டது என்ற புரிதலை முதலில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அந்தப் புரிதல் கொழும்புக்கு ஏற்படும் பட்சத்தில், தென்னாபிரிக்காவுக்கும் தனக்குமான 'சிந்தனை மட்டம்' எவ்வளவு பாரதூரமாக வேறுபடுகின்றது என்ற தெளிதல் இலங்கைக்குக் கிட்டும்.

## நாளொரு நல்வார்த்தை

" மனத் திருப்தி, நமக்கு இயற்கையாகக் கிடைத்த செல்வம்; ஆடம்பரம், நாம் செயற்கையாக உருவாக்கிக் கொண்ட பஞ்சம்..."

– சோக்ரடீஸ்




# ஆட்சியில் ஊழல்வாதிகள் நாடு முன்னேற்றமடையாது

### கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளிப்படை

**கொழும்பு, மே 16**



**ஊழல்வாதிகள் தொடர்ந்தும் பதவியில் இருப்பார்களாயின் சர்வதேச நாணய நிதியத்தாலோ அல்லது உலக வங்கியாலோ நாட்டை மீட்டெடுக்கமுடியாது - என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

சென். ஜோசப் தேவாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் எமது நாட்டை அபிவிருத்தி செய்வதாயின் நேர்மையாக நடக்கவேண்டும். இல்லாவிட்டால் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்லமுடியாது. கொடுக்கல் - வாங்கல்களை நேர்மையான முறையில் மேற்கொள்ளவேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்வதாயின் நாட்டில் ஒரு புரட்சி ஏற்படவேண்டும் - என்றார்.

கோத்தாபய ராஜபக்ச பதவிக்கு வருவதற்கு முக்கியமான காரணியாகத் திகழ்ந்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர் அரசாங்கத்துக்கு எதிராக தொடர்ச்சியாக கடும் விமர்சனங்களை முன்வைத்து வருவதுடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதிகோரி சர்வதேச உதவியையும் நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6)

# நாட்டைச் சீர்குலைக்கும் வகையில் போராட்டம் நடத்த அனுமதியில்லை

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, மே 16

நாட்டில் இடம்பெற்றுவரும் போராட்டங்களால் நாட்டை மீண்டும் சீர்குலைக்க இடமளிக்கப்படமாட்டாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் மாகாணசபையின் முதலமைச்சராகவும் இன்று அமைச்சரவை அமைச்சராகவும் செயற்படுகின்றேன். எனக்குக் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு நான் செல்வதில்லை. அங்கு சென்று நான் செல்வாக்குச் செலுத்துவதில்லை. அந்த நிறுவனங்கள் சுதந்திரமாகச் செயற்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை நான் எப்போதும் நிலைநிறுத்த முயற்சிக்கிறேன். இன்று அரச நிறுவனங்களில் நடக்கக்கூடாதவைகள் நடக்கின்றன. அவை முடிந்தவரை குறைக்கப்படவேண்டும். புதிய வழியில் சிந்தித்து, புதிய வழியில் செயற்பட்டால், எங்களால் நீண்ட பயணம் செல்ல முடியும் - என்றார். (ம)

**நாளை**

**17.05.2023**
**புதன்கிழமை**
**வைகாசி 03**

சுபநேரம் : 04.23 - 05.53
ராகுகாலம் : 11.53 - 01.23

**பிரதோஷவிரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### சிறைக்குள் வைத்து

# இம்ரான்கானை கொல்லச் சதி!

## கைதுசெய்யப்பட்ட விதம் பயங்கரம் அவரது சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு

**இஸ்லாமபாத், மே 16**

**இம்ரான்கானை சிறைக்குள் வைத்துக் கொல்வதற்குச் சதி முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. அவரது உயிருக்கு அரச தரப்பால் ஆபத்துள்ளது என்று இம்ரான்கானின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.**



பாகிஸ்தான் இராணுவத்துக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்திய குற்றச்சாட்டு உள்ளிட்ட பல்வேறு தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்களும், ஊழல் குற்றச்சாட்டுக்களும் இம்ரான்கானுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் அவருக்கு ஆதரவாளர்கள் அதிகம் என்பதாலும் அவரைக் கைது செய்தால் கலவரம்வெடிக்கும் என்பதாலும் இம்ரான்கானைக் கைதுசெய்வதற்கான திட்டம் பிற்போடப்பட்டது. எனினும், அவர் பாகிஸ்தான் படைகளால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வந்தார்.

இந்த நிலையில், பிறிதொரு வழக்குக்காகச் சென்றபோது நீதிமன்ற வளாகத்தில்வைத்து அண்மையில் சட்டத்துக்குப் புறம்பான வகையில் கைதுசெய்யப்பட்டார் இம்ரான்கான். இதையடுத்து பாகிஸ்தானெங்கும் கலவரம்வெடித்தது. நீதிமன்றத்தில் வைத்து ஒருவரைக் கைதுசெய்வது சர்வதேச சட்ட ஏற்பாடுகளுக்குப் புறம்பானது என்பதால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு வாரங்கள் எந்தக் குற்றச்சாட்டுக்காகவும் இம்ரான்கானை கைதுசெய்யமுடியாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையிலேயே இம்ரான்கானின் உயிருக்கு ஆபத்து என்றும் சிறையில்வைத்து அவரைக் கொல்வதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்றும் அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

இதனால், இம்ரான்கானை கைது செய்வதற்கு மேலும் சில காலம் நீதிமன்றம் தடை விதிக்கும் என்றும் அல்லது அவர் கைது செய்யப்பட்டாலும் நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட வாய்ப்புக்கள் உண்டு என்றும் கருதப்படுகின்றது. (ம)

## பாகிஸ்தானில் ஜனநாயகம் முழுதும் நசுக்கப்பட்டுள்ளது

### இம்ரான்கான் ஆவேசம்



இஸ்லாமபாத், மே 16

பாகிஸ்தானில் ஜனநாயகம் முற்றுமுழுதாக நசுக்கப்பட்டுள்ளது. நீதித்துறையொன்றே மக்களின் ஒரே நம்பிக்கை - என்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான்கான் தெரிவித்தார்.

நீதிமன்ற வளாகத்தில்வைத்து அண்மையில் சட்டத்துக்குப் புறம்பான வகையில் கைதுசெய்யப்பட்ட இம்ரான்கான், நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் தனது வீட்டுக்குத் திரும்பினார். இதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தானில் மோசமான நிலைமை நிலவுகிறது. ஜனநாயகம் மிகவும் தாழ்ந்த நிலைக்குச் சென்றுவிட்டது. ஜனநாயகம் நசுக்கப்பட்டுள்ளது. இனி நமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை நீதித்துறைதான். நமது ஜனநாயகம் ஒரேயொரு நூலில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதுதான் நீதித்துறை. பொலிஸாரையும், அரசாங்கத்தையும் தடுத்து நிறுத்தியது நீதித்துறைதான். இன்று நான் இங்கு அமர்ந்திருப்பதற்கு அவர்கள்தான் காரணம். முழுத் தேசமும் நீதித்துறையுடன் நிற்கவேண்டிய நேரம் இது. அரசு என் மீது போலியான பல வழக்குகளைத் தொடர்ந்துள்ளது. இவை அனைத்துமே பொய் என்று நிரூபிப்பேன் - என்றார். (ம)



## ரஷ்யப் போர்விமானங்களை சுட்டு வீழ்த்தியது உக்ரைன்

கீவ், மே 16

ரஷ்யாவின் நான்கு போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என்று உக்ரைன் அறிவித்துள்ளது. அவற்றில் இரண்டு விமானங்கள் அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்டவை என்றும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் போர் இடம்பெற்று வருகின்றது. கடந்த இரண்டு வாரகாலமாக உக்ரைன்மீது வான் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது ரஷ்யா. இந்த நிலையிலேயே 4 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என்று உக்ரைன் தெரிவித்துள்ளது. விமானங்கள் வீழ்த்தப்படும் காணொலிகள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் இது தொடர்பில் ரஷ்யா எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை.

'ரஷ்யர்கள் இன்று (நேற்றுமுன்தினம்) வருத்தமடைந்துள்ளனர். ஏனெனில் அவர்கள் நான்கு விமானங்களை இழந்துள்ளனர்' என்று உக்ரைன் அரசின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

## வளிமண்டலத்தில் மர்மச் சத்தங்கள்

வொஷிங்டன், மே 16

பூமியின் வளிமண்டலத்தில் உருவான மர்மச் சத்தங்களை விஞ்ஞானிகள் பதிவு செய்துள்ளனர். பூமியின் அடுக்கு மண்டலத்தின் ஒலிகளை பதிவுசெய்ய ராட்சத பலூன்கள் 70 ஆயிரம் அடி உயரத்துக்கு அனுப்பப்பட்டன. இதன்போதே இந்த மர்மச் சத்தங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஸ்ட்ரா டோஸ்பியர் என்பது பூமியின் வளிமண்டலத்தின் 2 ஆவது அடுக்கு ஆகும். அதன் கீழ் மட்டத்தில் ஓசோன் படலம் உள்ளது. இந்த அடுக்கு மண்டலத்தில் ஒலிகளைப் பதிவு செய்வதற்காகப் பலூன்கள் அனுப்பப்பட்டன. முற்றிலும் அதிநவீன நுண்திறன் கருவிகளைக் கொண்டதாக அந்தப் பலூன்கள் வடிவமைக்கப்பட்டன. இந்தப் பலூன்கள் வணிமண்டலத்தில் மர்மமான ஒலிகளைப் பதிவுசெய்துள்ளன. அது எவ்வகையான ஒலிகள் என்று கண்டுபிடிக்கப்பட முடியாதுள்ளது என்று தெரிவித்துள்ள விஞ்ஞானிகள், இது தொடர்பில் தொடர்ச்சியாக ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளனர். (ம)





## இஸ்ரேல் - பலஸ்தீனம் போர் நிறுத்த அறிவிப்பு

டெல் அவிவ், மே 16

இஸ்ரேல் பலஸ்தீனம் இடையே கடந்த ஒரு வாரமாக நிலவிய போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனிய ஆயுதக் குழுவின் தலைவர் காதர் அதானென், கடந்த 2 ஆம் திகதி இஸ்ரேல் சிறையில் உயிரிழந்தார். இதையடுத்து காசா முனையில் இருந்து இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்ததை அடுத்து நிலைமை தீவிரமானது. எனினும் இரு தரப்புக்கும் இடையே சமரச முயற்சிகளை எகிப்து மேற்கொண்டது. இதன் பயனாக இரு தரப்பும் போர் நிறுத்தத்துக்கு இணங்கியுள்ளன. (ம)

## 20 ஆண்டுகால ஆட்சியை தக்கவைப்பாரா எர்டோகன்?

அங்கரா, மே 16

துருக்கி நாட்டில் நேற்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதனால், அங்கு கடந்த 20 ஆண்டுகளாக ஆட்சி செய்துவரும் எர்டோகனின் ஆட்சி முடிவுக்கு வருமா? அல்லது அவர் ஆட்சியைத் தக்கவைப்பாரா? என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

துருக்கி நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஜனாதிபதிக்கு அதிகாரக் குவிப்புக்களை செய்ததமைக்காகவும், அண்மையில் இடம்பெற்ற 50 பேர் உயிரிழக்கக் காரணமான நிலநடுக்கத்தின்போது மீட்புப் பணிகளை விரைந்து முன்னெடுக்காமையாலும் எர்டோகனின் மீது அதிருப்தி உள்ளதால் அவர் ஆட்சியை இழக்கலாம் என்று கருத்துக்கணிப்புகள் முன்னதாக வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டமட்ட மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி

கிளிநொச்சி, மே 16
கிளிநொச்சிதெற்கு வலயத்தின் கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான இந்த ஆண்டுக்கான மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு றொட்றிக்கோ பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம் தலைமையில் மூன்று நாட்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. (ஒ-இ)

# மாணவ முதல்வர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 16
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் சிரேஷ்ட மாணவ முதல்வன் க.திவாசவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் 1998 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர மாணவன் நாகராஜா குணதர்சன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (எ-66)

# கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி!

கொழும்பு, மே 16
உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைவடைந்துள்ளது. உலகின் முன்னணி எரிபொருள் விநியோகஸ்தர்கள் விநியோகத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாலும், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் எரிபொருள் தேவை குறைந்ததாலுமே கச்சா எண்ணெயின் விலை குறைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்தவருடம் செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் கச்சா எண்ணெயின் விலை தொடர்ச்சியாகக் குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


# மரண அறிவித்தல்

## தர்மகுலசிங்கம் சந்திரேஸ்வரி (சந்திரா)



தோற்றம் 29.11.1951 — மறைவு 13.05.2023

சிறாம்பியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் சந்திரேஸ்வரி கடந்த (13.05.2023) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசையா ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மகுலசிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்) அவர்களின் பாசமிகு மனைவியும், யுடிற்றா (டொனா- லண்டன்), டொனிற்றா (சியானி - ஜேர்மன்), டெனிசன், ஜான்சன், பிரசாந்தினி (மயூரி - சுவிஸ்), காலஞ்சென்ற கஜலக்ஷன், விமல்சன் (மதுசன் - ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகன் (லண்டன்), சூரியகுமார் (ஜேர்மன்), செல்வதர்சினி (உஷா), நிதர்சனா (சுணா), சசிகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், கனோஜ் (லண்டன்), கருணி (லண்டன்), ஆதவன் (ஜேர்மன்), ஆர்த்தி (ஜேர்மன்), சுகேதன், திகாஷ், காசினி, சாயிமித்திரா (சுவிஸ்), சாயினாத் (சுவிஸ்), சாய்ரா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஜெனரட்ணசிங்கம் (ஜெனம்), விமலேஸ்வரன் (ராசு) மற்றும் வாலேஸ்வரி, சந்திரரேஸ்வரன், யோகேஸ்வரி, யோகேஸ்வரன் (சுரேஸ்) ஆகியோரின் சகோதரியும், குணசிங்கம், இரட்ணசிங்கம், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், தேவன் (செல்லக்கிளி), சந்திரகுமார் (சந்திரன்) மற்றும் நாகேஸ்வரி (கிளி - ஜேர்மன்), நகுலேஸ்வரி (சண்முகவடிவு -ஜேர்மன்), உஷா (உமா - ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

370, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


# வர்த்தக நடவடிக்கைகளுக்கே அம்பாந்தோட்டைத் துறைமுகம்

*அமைச்சர் நிமால் தெரிவிப்பு*

அம்பாந்தோட்டை துறைமுகத்தைத் எந்தவொரு தேவைக்கோ அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்கோ சீனாவால் பயன்படுத்த முடியாது. சீனாவுடனான இலங்கையின் உடன்படிக்கை மிகவும் தெளிவாக உள்ளது இவ்வாறு துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்கவேண்டிய நிலை ஏற்பட்ட போது, இந்தியா மற்றும் அமெரிக்காவிடம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் சீனர்கள் வந்து அதைக் கைப்பற்றினார்கள்.
சீனாவுடனான ஒப்பந்தம் தனியார்மயமானது. வர்த்தகத்துக்கு மட்டுமே துறைமுகத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பது அதில் தெளிவாக உள்ளது. இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாக நாம் கவனமாக இருக்கவேண்டும். எங்களிடம் மிகவும் நட்பு ரீதியான உறவு உள்ளது. கொழும்பின் வலுச்சக்தி துறையைக் கட்டியெழுப்புவதற்கு புதுடில்லி உதவுகின்றது - என்றார். (எ-இ)


# நீங்கா நினைவுகளில்

14ஆம் ஆண்டு
மலர்வு 25.04.1984

உதிர்வு 16.05.2009
**கதிர்காமவேலன் ஹரிதாஸ்**

31ஆம் ஆண்டு
மலர்வு 11.03.1972

உதிர்வு 28.08.1992
**கதிர்காமவேலன் சிறிகாந்தன்**

வாசமுல்லைப் பூக்களென வாழ்ந்திருந்தோம் ஒன்றாய்
நேசமதை விட்டுநீங்கி திருவாழ்வை நீரமைத்து
பாசத்து உறவுகளை பாங்கோடு காத்திருந்தீர்
வீசுமொரு புயலாக வந்தகாலன் உந்தனையும் பேசாது
அழைத்தானோ? புன்னகையைப் பறித்தானோ?
நேசமே! நீர் நீங்கியதால் நெக்குருகி நிற்கின்றோம்
மூசுமொரு அலையாக மனங்களிங்கு பரிதவிக்க
மாசற்ற எமதுறவே! மண்விட்டுச் சென்றீரோ?

மீசாலை வடக்கு
வேம்பிராய்

(CR 8802) A-1

என்றும் உங்கள் பிரிவுத்துயரால் வாடும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலி அந்தியேட்டி அழைப்பு மற்றும் நன்றிகூறல்

அன்னை மடியில்
15 . 11 . 1948



இறைவன் அடியில்
16 . 04 . 2023

## அமரர் நாகலிங்கம் ஆனந்தசிவம்

**திதி:- சித்திரை மாத தேய்பிறை ஏகாதசி**

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் விளங்கிய அமரர் நாகலிங்கம் ஆனந்தசிவம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (16.05.2023) செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறுதலளித்து துயர் பகிர்ந்ததுடன், மலர் மாலைகள், மலர் வளையங்கள், பிரசுரங்கள், பதாகைகள் மூலமாக அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், ஏனைய பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்து பகலிரவு பாராது எமது துயரில் முழு மனதுடன் பங்குகொண்ட எங்களது உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

55/1, குமாரசுவாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 3266535

(CS 24878) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
21
11
1951

மறைவு
13
05
2023

எமது நண்பன் த.டெனிசனின் அன்புத் தாயார்

திருமதி
## தர்மகுலசிங்கம் சந்திரேஸ்வரி

**13.05.2023 அன்று இறைபதமடைந்துவிட்டார்.**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**நண்பர்கள்**
**வீரமாகாளி அம்மன் கோவிலடி**

(CS 24877) 1-6

# மரண அறிவித்தல்



## திருமதி சிவஞானராஜேஸ்வரி (மாலா) ஸ்ரீஸ்கந்தராசா

**(யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி)**

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானராஜேஸ்வரி ஸ்ரீஸ்கந்தராசா நேற்று (15.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - சிவசோதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தியாகராசா - சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசாவின் அன்பு மனைவியும், வாணிஸ்ரீ, சிவஸ்ரீ (பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், திட்டமிடல்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரன், சுதர்சினி (ஆசிரியர், கிளி/ பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், கபிலன், ஸ்ரீராம், பூர்விக்ஹா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற சகுந்தலாதேவி, சிவனேஸ்வரராஜா, காலஞ்சென்ற சிவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாலேஸ்வரி, பஞ்சேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற வரதராசா, செல்வி, மாயாசுதன், ராஜன், சிவச்செல்வன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**90, ஈச்சமோட்டை வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

(CS/50424)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## அருள்மிகு வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் விழா - 2023

# கேள்வி பத்திரம் கோரல்

அருள்மிகு வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 2023/06/05 ல் நடைபெற உள்ளதால் இவ் விழாவிற்கு தேவையான பின்வரும் சேவைகளினை வழங்குவதற்கு தகுதியான வழங்குனர்களிடம் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- மின் பிறப்பாக்கியுடன் கூடிய ஒளிச் சேவை (இரண்டு வலயம்)
- ஒலி பெருக்கிச் சேவை
- தற்காலிக கண்காணிப்பு கமரா சேவை (CCTV Camera)

இச் சேவைகளினை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை இன்று 2023/05/16 ம் திகதி முதல் 2023/05/29 ம் திகதி வரை பின்வரும் இடங்களில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

- வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் (ஆலயகாரியாலம்)
- மாவட்ட செயலகம் முல்லைத்தீவு (கணக்கு கிளை)

கேள்விமனுக்கள் விநியோகிக்கும் இறுதி திகதி 29/05/2023 ஆகும். கேள்விப்பத்திரம் 2023/05/30 ம் திகதி மாலை 2.00 க்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் திறக்கப்படும்.

மேலும் ஆலய சூழலில் தற்காலிக கடைகளை வடகைக்கு வழங்குதல் 2023/06/01 ம் திகதி முதல் 04.06.2023 வரை தினசரி காலை 10.00 மணிமுதல் மாலை 04.00 வரை வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் முன்றலில் நடைபெறும்.

காவடிச் சேவை வழங்குனர்கள் கோவில் நிர்வாகத்தை தொடர்புகொள்ளவும்.

அருள்மிகு வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வருடாந்த பொங்கல் விழாவிற்கு நிதிபங்களிப்பு மற்றும். காணிக்கைகளை வழங்க ஆர்வமுள்ள பக்தர்கள் நேரடியாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் வங்கிக் கணக்கிற்கு (கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) வைப்பிடவே அல்லது ஆலய காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பங்களிப்பினை வழங்கமுடியும். தனி நபராகவோ அல்லது குழுவாகவோ காணிக்கை சேகரித்தல் உள்ளூர். வெளிநாடுகளில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

திருப்பணி நன்கொடைக்கு இலங்கை வங்கி. முள்ளியவளை கிளை. கணக்கு இலக்கம் 70274525
மேலதிக தகவகளிற்கு:
**ஆலய காரியாலயம்** : 024 324 3558
**மாவட்ட செயலகம்** : 021 229 0034

**பெறுனர்,**
**வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில்,**
**மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.**

(cr.37124) (2.6)

# ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மயிலிட்டி உபஅலுவலகம்

**விண்ணப்பதாரர்களின் பெயர்கள் :- குண்டுமணி பத்மநாதன் & பெண் சசிகலா, பூபாலன் தேவராசா & பெண் நளினி, சின்னராசா அனுஷா, சின்னராசா சுகந்தினி, பத்மநாதன் ஜென்சிஹா**

**முகவரி : 2ம் ஒழுங்கை, குடியேற்றத்திட்டம், வறுத்தலைவிளான், தெல்லிப்பளை.**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 14, ஆதன இல 12/10, அண்ணமார் கோவில் வீதியில் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று வறுத்தலைவிளான் இறையுமான கம்மாவத்தை என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் சின்னராசா சரஸ்வதி என்ற பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் துரையப்பா பாக்கியநாதன் முகதாவில் நிறைவேறிய 14397 / 09.01.2016 இலக்கத்தில் முடிந்த வெளிப்படுத்தல் உறுதி மூலம் நிலப்பரப்பு 22 அளவுடைய ஆதனத்தை சின்னராசா கைம்பெண் சரஸ்வதி என்பவர் நீண்ட காலத்திற்கு முன் இராசநாயகம் கைம்பெண் நாகம்மாவிடம் முழுக்கிரயமும் கொடுத்து கொள்வனவு செய்ததாகவும் நாட்டில் ஏற்பட்ட இடம்பெயர்வில் அந்த உறுதிச்சாதனம்" தொலைந்து விட்டதாகவும் அவ்வாதனத்தை தனது சொந்த ஆதனமென வெளிப்படுத்தியுள்ளார். பின்னர் இதில் வடகிழக்கு பக்கமாக நிலப்பரப்பு 04 இனை பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.சிந்துஜா நடேசன் முகதாவில் நிறைவேறிய 65 / 23.03.2016 இலக்க உறுதி மூலம் குண்டுமணி பத்மநாதன் & பெண் சசிகலா என்பவர்களுக்கு நன்கொடையளித்தார். பின்னர் இதில் கிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு 04 இனை பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.சிந்துஜா நடேசன் முகதாவில் நிறைவேறிய 64 / 23.03.2016 இலக்க உறுதி மூலம் பூபாலன் தேவராசா & பெண் நளினி என்பவர்களுக்கு நன்கொடையளித்தார். பின்னர் இதில் மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு 01 இனை பிரசித்த நொத்தாரிஸ் செல்வி சிந்துஜா நடேசன் முகதாவில் நிறைவேறிய 66 / 23.03.2016 இலக்க உறுதி மூலம் சின்னராசா அனுஷாவிற்கு நன்கொடையளித்தார். பின்னர் இதில் வடமேற்குப்பக்கமாக நிலப்பரப்பு 04 இனை பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.சிந்துஜா நடேசன் முகதாவில் நிறைவேறிய 80 / 27.03.2016 இலக்க உறுதி மூலம் சின்னராசா சுகந்தினிக்கு நன்கொடையளித்தார். மீண்டும் சின்னராசா சுகந்தினிக்கு இதில் தெற்குபக்கமாக நிலப்பரப்பு 05 குழி 8.42 இனை பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.ஜெயச்சித்ரா சிறீதரன் முகதாவில் நிறைவேறிய 5001 / 19.02.2023 இலக்க உறுதி மூலம் நன்கொடையளித்தார். மற்றும் இதில் தென்மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு 03 குழி 01.50 இனை பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.ஜெயச்சித்ரா சிறீதரன் முகதாவில் நிறைவேறிய 5002 / 19.02.2023 இலக்க உறுதி மூலம் பத்மநாதன் ஜென்சிஹாவிற்கு நன்கொடையளித்தார்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பளை கோவிற்பற்று வறுத்தலைவிளான் இறையுமான கம்மாவத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.T.ஸ்ரீஸ்கந்தசிங்கம் அவர்களின் 430/ 20.01.2016 இலக்க நில அளவைப் பட வரைபடத்தில் துண்டு 01,03,04,05 எனக் காட்டப்பட்ட ஆதனமும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.T.ஸ்ரீஸ்கந்தசிங்கம் அவர்களின் 708/15.03.2020 இலக்க நில அளவைப்பட வரைபடத்தில் துண்டு 01,02 எனக் காட்டப்பட்ட ஆதனமும் ஆகும்.

**கிழக்கு** - தம்பிராசா பார்த்தீபனுக்கும் மற்றுபேருக்குமுரிய ஆதனம்
**வடக்கு** - இலங்கையன் சீனியனின் ஆதனமும் ஒழுங்கையும்
**மேற்கு** - மூத்ததம்பியின் ஆதனம்
**தெற்கு** - கதிரவேலு பெண் அன்னலட்சுமியின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை குண்டுமணி பத்மநாதன் & பெண் சசிகலா. பூபாலன் தேவராசா & பெண் நளினி, சின்னராசா அனுஷா. சின்னராசா சுகந்தினி, பத்மநாதன் ஜென்சிஹா என்ற பெயர்களில் ஆதனஉரிமைமாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரிகளின் பெயர்களுக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

(CS/50434)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஏற்பாட்டில் உலகப் புத்தகதின நிகழ்வு மேற்படி கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.
மூத்த எழுத்தாளரும், பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபருமான கவிஞர் சோ.பத்மநாதன் விருந்தினராகக் கலந்துகொண்டு 'இன்றைய கல்வி முறை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த சில சிந்தனைகள்' எனும் கருப்பொருளில் உரையாற்றினார். கலாசாலையின் விரிவுரையாளர்கள்.சார்பில் சி.மனோகரன் உலகப் புத்தக தினம் தொடர்பான சிறப்புரையை நிகழ்த்தினார். (66)




யாழ்.ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையில் சிறுவர் கடமைகள், ஒழுக்கம், உரிமைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ய-66)

# பேராசிரியர் பதவிக்கு வழங்கப்பட்ட விளக்கம்

கொழும்பு, மே 16

தகுதிகள் இல்லாத பலர் தங்களைப் பேராசிரியர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்கின்றனர் என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்த நிலையில், இந்தவிடயம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெளிவுபடுத்தல் ஒன்றை விடுத்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, நாடாளுமன்ற பொதுநிறுவனங்களுக்கான குழுவால் அழைக்கப்பட்டபோது, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியராக இருந்த கோப் குழுவின் தலைவரான ரஞ்சித் பண்டார. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவிடம் இந்த விடயம் தொடர்பில் பிரஸ்தாபித்தார். தகுதியற்ற சிலர் தங்களைப் பேராசிரியர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்கின்றனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.


அதற்குப் பதிலளித்த பேராசிரியர் அமரதுங்க, பேராசிரியர் என்பது ஒரு பதவி என்றும், பல்கலைக்கழகத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அல்லது பதவி விலகிய பின்னர் எவரும் அதைப் பயன்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டார். எனினும் ஒருவர், பணி ஓய்வுக்குப் பின்னரும் தம்மைப் பேராசிரியர் என்று கூறிக்கொள்வதற்கு சில அளவுகோல்களை பூர்த்தி செய்யவேண்டும் என்பதற்கான சுற்றறிக்கையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு பல்கலைக்கழகத்தின் செனட், கல்வித்துறைக்கான ஒருவரின் சேவையை ஆய்வு செய்த பின்னர், அவருக்கு எமரிட்டஸ் பேராசிரியர் என்ற வாழ்நாள் பேராசிரியர் பதவியை வழங்குவதற்கான கோரிக்கையை அங்கீகரிக்கவேண்டும். அந்தக் கௌரவம் ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் அமரதுங்க குறிப்பிட்டார்.

வாழ்நாள் பேராசிரியர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார ஆகியோரை அழைக்க முடியும் எனவும் பேராசிரியர் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார். (எ-இ)


## மரண அறிவித்தல்

ஜனனம் 1953 . 04 . 08



மரணம் 2023 . 05 . 15

### திரு.பொன்னம்பலம் குணசேகரம்
(காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை முன்னாள் ஊழியர்)

யாழ்ப்பாணம் பலாலியைப் பிறப்பிடமாகவும் புதுத்தோட்டம் தெல்லிப்பளையில் வசித்து வந்தவரும், தற்சமயம் அம்பலவாணர் வீதி, உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட திரு. பொன்னம்பலம் குணசேகரம் (காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை முன்னாள் ஊழியர்) நேற்று (15.05.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மகனும், பொன்னையா - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், ஜெயதேவியின் அன்புக் கணவரும், குணசேகரி (சுந்தரி), ரவிச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும், சிந்துஜா (நெதர்லாந்து), குகரூபன் (பிரான்ஸ்), ஜெயரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ருவான், சதுர்மதி (ஜெனா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சதுசன், அக்சஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பளை கொத்தியால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.56,அம்பலவாணர் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.

(CS/50439)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு :
மகள், சிந்துஜா - 0777178863, மகன், ரூபன் - +33651254782 (பிரான்ஸ்)
லஜீபன் - 0773314610, றெஜி (பிள்ளையார்) - 0766897400



## மரண அறிவித்தல்

தோற்றம் . 14 . 04 . 1996



மறைவு . 15 . 05 . 2023

### ஜெயராஜா சிவகஜன்
(சக்கரை ஆச்சாரியரின் (மரக்காலை) பேரன்)

105, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராஜா சிவகஜன் (கஜா) நேற்று (15.05.2023) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் ஜெயராஜா கோமதி தம்பதியரின் அன்புப் புதல்வனும், வைஷ்ணவியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சக்கரை முத்தாவடையம்மா, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (தெல்லிப்பளை தம்பிராசா) புஸ்பலீலாவதியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.105, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6670 802
(ஜெயா) 077 521 2651

(CS 24881) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆளுநர்கள்...

காரியவசம் தெரிவித்தார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணங்களுக்குரிய தமது பிரதிநிதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கின்றது. மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாகவே செயற்படுகின்றனர். எனினும், தற்போதைய நிலைமையானது, மாகாணசபை முறைமை உருவாக்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றவில்லை.

தமது பகுதிக்குரிய தீர்மானங்களை தமது பிரதிநிதிகள் ஊடாக மக்கள் எடுப்பதற்காகவே மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. மாகாணசபை முறைமை செயற்பட்டாலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. அதிகாரம் முழுவதும் ஆளுநர் வசம் இருப்பது ஜனநாயகத்துக்கு ஏற்புடைய விடயம் அல்ல.

ஒரு ஆளுநரின் செயற்பாடு திருப்தி இல்லையெனில் அவரை நீக்குவதும், புதியவரை நியமிப்பதும் ஜனாதிபதிக்குரிய அதிகாரம். அது விடயத்தில் கட்சி என்ற அடிப்படையில் நாம் தலையீடுகளை மேற்கொள்ளமாட்டோம்.

அமைச்சரவை நியமன விடயத்திலும் அப்படித்தான். குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்கினால் நல்லது என யோசனை முன்வைத்தோமே தவிர அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை - என்றார். (அ-ஒ,44)

### உறவுகளைத்...

போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு இலங்கையில் எந்த அரசும் தடைவிதிக்கவில்லை. நினைவேந்தல் காலங்களில் விடுதலைப்புலிகளையும்நினைவேந்துவதால் தான் சிக்கல் நிலை ஏற்படுகின்றது, தடைகளும் வருகின்றன. தமிழ் மக்களிடம் நான் கூறிக்கொள்ள விரும்புவது போரில் உயிர் நீத்த உங்கள் உறவுகளை, உறவுகள் என்ற ரீதியில் நீங்கள் தனித்தனியே நினைவேந்துங்கள். அதைவிடுத்து புலிப்பயங்கரவாதிகளை நினைவேந்தும் நிகழ்ச்சி நிரலுக்குள் நீங்களும் பங்கேற்று உங்கள் உறவுகளை நினைவேந்துவதைத் தவறவிடாதீர்கள் - என்றார். (அ-ஒ.5.22)

### உறவுகளை...

அத்துடன் வடக்கு - கிழக்கில் உறவுகள் என்ற போர்வையில் புலிப் பயங்கரவாதிகளை ஆண்டுதோறும் ஒரு தரப்பினர் பகிரங்கமாக நினைவேந்தி வருகின்றனர். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான ரியல் அட்மிரல் சரத்வீரசேகர தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் வடக்கு - கிழக்கில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு நினைவேந்தல்களுக்கு அனுமதி வழங்குவதால் புலிப் பயங்கரவாதிகளையும் தமிழ்த் தரப்பினர் நினைவேந்தி வருகின்றனர். அத்தகைய நிகழ்வுகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும். போரில் இறந்த உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்த வேண்டுமெனில் அவர்கள் தங்களது வீடுகளுக்குள் அதனைச் செய்ய முடியும். அதைவிடுத்து ஊர்திப் பேரணிகள் மூலமும் கஞ்சிகள் வழங்கியும் பொது இடங்களில் விளக்கேற்றியும் வழிபடவேண்டிய அவசியமில்லை. எதிர்காலத்தில் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ-ஒ,5.22)

# நான் குறுக்குவழியில் பதவிக்கு வரமாட்டேன்



## கூறுகிறார் மஹிந்த

கொழும்பு, மே 16

எமது ஆட்சியே தற்போதும் நடக்கின்றது. இந்த நிலையில் சதித் திட்டங்கள் ஊடாகப் பிரதமர் பதவியை நான் கைப்பற்றப்போவதாக ஊடகங்களில் வெளியான செய்தி போலியானது மட்டுமன்றி வேடிக்கையானதுங்கூட - இவ்வாறு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சதித்திட்டத்தின் ஊடாக பிரதமர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு மஹிந்த ராஜபக்ச முயல்கின்றார் என்று வெளியான செய்தி தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'மொட்டுக் கட்சிக்கே கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் அமோக ஆதரவு வழங்கினர். அதன் பிரகாரம் பிரதமர் பதவியை நான் பொறுப்பேற்றேன். நாட்டில் ஏற்பட்ட ஒரு சில தவறான நடவடிக்கைகளால் கடந்த வருடம் பிரதமர் பதவியிலிருந்து விலகினேன். எனினும் எமது கட்சியின் ஆட்சியே தொடர்கின்றது. எமது கட்சியின் உறுப்பினரே பிரதமராகவும் உள்ளார். மீண்டும் ஒரு தேர்தலில் மக்களின் ஆணையை ஏற்று நான் பிரதமராவேன்' என்றார் மஹிந்த. (அ-ஒ.22)

# சதித் திட்ட பிரதமராக மஹிந்த தயாரில்லை!



## நாமல் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 16

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச சதித் திட்டங்களூடாகப் பிரதமர் பதவியைப் பெறுவதற்குத் தயாராகவில்லை. மக்கள் ஆணையின்படி, அவர் மீண்டும் பிரதமர் பதவியைப் பெறுவதற்குத் தயாராகவுள்ளார் - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'மஹிந்த ராஜபக்ச மக்களுக்காகவே பிரதமர் பதவியை விட்டு வெளியேறினார். அவர் மீண்டும் இந்த நாட்டின் தலைமைக்குத் திரும்பினால், அது மக்களின் விருப்பத்துடனேயே அமையும்' - என்றார். (அ-ஒ.22)

## புத்தரை இழிவுபடுத்தியதாக போதகர் மீது விசாரணை

### ரணில் பணிப்பு



கொழும்பு, மே 16

மத நல்லிணக்கத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் கிறிஸ்தவப் போதகரான ஜெரோமி பெர்னாண்டோ தெரிவித்த கருத்துத் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜெரோமி பெர்னாண்டோ புத்தரை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார். புத்தர் ஞானம் பெற்றுக் கொண்டு ஒளியைத் தேடியவர் என்றும் இயேசு கிறிஸ்துவே அந்த ஒளி எனவும் போதகர் ஜெரோமி தெரிவித்திருந்தார். புத்தரும் இயேசுவையே தேடியதாகப் போதகர் குறிப்பிட்டார். பௌத்தர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்து தேவை என்றும் போதகர் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே ஜனாதிபதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுரைச்சோலையின் 3ஆவது அலகு மூடல்

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் 3 ஆவது அலகு அடுத்த மாதம் 13ஆம் திகதி முதல் 100 நாட்களுக்கு மூடப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். ஆயினும், குறித்த காலப்பகுதியில் மின்வெட்டு இருக்காது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ.இ)

## நடராஜரைத் திருடிய சிப்பாய் சிக்கினார்

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள ஆலயமொன்றிலிருந்து பித்தளை நடராஜர் சிலையைத் திருடிய சந்தேகத்தில் சிப்பாய் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கராயன்குளத்திலுள்ள முகாமில் [illegible] சிப்பாய் மாதாந்த விடுமுறையை முடி[illegible] திரும்பியபோதே இந்தச் சம்பவம் இட[illegible] தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபா [illegible] விக்கிரகத்தைத் திருடியபோது முச்சக்கர[illegible] களால் பிடிக்கப்பட்டு வவுனியா பொலிஸா[illegible] டைக்கப்பட்டுள்ளார். திருடப்பட்ட சிலையின் பெறுமதி சுமார் 50 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ.110)

## மாகாணசபைத்...

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணிலுக்கும், வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்றுமாலை இரண்டாம் சுற்றுச் சந்திப்பு நடந்தது.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் பிரசன்ன ரணதுங்க, நஸீர் அகமட், ஜனாதிபதியின் செயலர் உள்ளிட்ட அரசதரப்பு பிரதிநிதிகளும், இரா.சம்பந்தன், த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், எம்.ஏ.சுமந்திரன், க.வி. விக்னேஸ்வரன், சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன், ஆளும் தரப்பைச் சேர்ந்த சிவநேசதுரை சந்திரகாந்தன், ச.வியாழேந்திரன், அங்கஜன் இராமநாதன், கு.திலீபன் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர். சுகவீனம் காரணமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பில் பங்கேற்கவில்லை.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே ரணில் விக்கிரமசிங்க ஒரு யோசனையைத் தெரிவித்தார். சில தமிழ்க் கட்சிகள் கையொப்பமிட்டு அனுப்பிய வரைவொன்று தனக்கு கடந்த 8ஆம் திகதி கிடைத்ததாகவும், அந்த யோசனையை நடைமுறைப்படுத்துவோமா எனக் கேட்டு, அந்த யோசனை வரைவின் பிரதிகளை சிலரிடம் வழங்கினார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாகங்களை கவனிக்கவும், மாகாண அதிகாரங்களை மீளப்பெறவும் 6 மாத இடைக்கால சபை என்ற திட்டவரைவு வடக்கு - கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் செயலர் கலாநிதி க.விக்னேஸ்வரனால் தயாரிக்கப்பட்டு, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி. விக்னேஸ்வரன் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார்.

இதனையே நடைமுறைப்படுத்துவோமா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்க, க.வி. விக்னேஸ்வரன் அந்த யோசனையை வாசித்து விளக்கமளிக்க ஆரம்பித்தார். எனினும், ஏனைய தமிழ்க் கட்சிகள் விக்னேஸ்வரனை இடைமறித்து, அந்த யோசனையில் தமக்கு உடன்பாடில்லையென தெரிவித்தன. எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த அறைவில் தமது கட்சிகள் கையொப்பமிடவில்லையென்றும், கொள்கை முடிவாகவே கையொப்பமிடவில்லையென்றும் தெரிவித்தனர். இந்த யோசனையில் கையொப்பமிட்டவர்களில் ஒரு கட்சிக்கு மட்டுமே ஒரேயொரு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் உள்ளது என சுமந்திரன் சுட்டிக்காட்டினார். இதன்போது விக்னேஸ்வரனுக்கும், சுமந்திரனுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டது.

இடைக்கால சபையொன்று அமைவதை நாம் எதிர்க்கவில்லை, ஆனால், இப்படியான யோசனைகள் மூலம் மாகாணசபைத் தேர்தலை தள்ளிவைக்காமல், உடனடியாக மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டுமென அனைவரும் வலியுறுத்தினர். தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் முன்னர் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட, பழைய முறைமையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தலாமென தெரிவித்ததை சுட்டிக்காட்டிய எம்.ஏ.சுமந்திரன், அரசாங்கத்துக்கு தேர்தலை நடத்த வேறு என்ன தடையென வினாவினார். அத்துடன் தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டவரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

தமிழ்க்கட்சிகள் தரப்பில் கலந்துகொண்ட பலர் மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டுமென வலியுறுத்தினர். அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் மாகாணசபைத்தேர்தலை நடத்துவதற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தார். எனினும், தேர்தலை நடத்துவது தொடர்பில் பிடிகொடுக்காத ஜனாதிபதி, அரசும் தமிழ்த் தரப்பும் இணைந்து ஒரு குழு அமைத்து, அடுத்து என்ன செய்வதென ஆராய்வோமா எனக் கேட்டார். தமிழ்த்தரப்பினர் கூட்டாக அதை நிராகரித்து விட்டனர்.

மாகாணசபையிலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் என்னவென்பது அரசுக்கும் தெரியும். அது பற்றிய பல அறிக்கைகள் தமிழ்த்தரப்பால் வழங்கப்பட்டு விட்டது. இனியும் இதைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கத்தயாரில்லை. உடனடியாகத் தேர்தலை நடத்தி, மாகாணசபையை இயங்க வைத்து, பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளளியுங்கள் எனத் தமிழ் எம்.பிக்கள் தெரிவித்தனர்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி ரணில் விக்கிரமசிங்க பேச முயற்சித்த போது, அதை அடுத்ததாகச் செய்யலாம், முதலில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி, மாகாணசபையை இயங்க வைக்கலாம் என தமிழ்த்தரப்பில் கூறப்பட்டது. எதையும் செய்யாமல், அரசியலமைப்பு திருத்தம் பற்றி ஆராய முற்பட்டால், இறுதியில் தொலைக்காட்சி பேச்சு நிகழ்ச்சிகளை போலவே முடிந்து விடும், அதனால் முதலில் மாகாணசபைத்தேர்தலை வைப்போம் எனக் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரப்பகிர்வு, மாகாணசபைத் தேர்தல் என்பன தொடர்பாக குழு அமைப்பேன் எனவும் அதில் தமிழர் தரப்புக்கள் பங்கேற்காவிட்டாலும் ஏனையோரை நியமித்து அந்தக் குழு கலந்துரையாடல்களை நடத்தும் என்றும் குறிப்பிட்டார்.

அந்தக் குழுவின் கலந்துரையாடல்களின் பின்னர் எடுக்கப்படும் முடிவுகளுடன் ஜூன் மாதம் மீண்டும் சந்திப்பது என்ற தீர்மானத்துடன் முடிவுக்கு வந்தது நேற்றைய கூட்டம். (அ-ஔ.5)

## மருத்துவ...

அதனடிப்படையில் 'வலி சுமந்த காலத்தில் உயிர்காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கும் செயற்பாடு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று இடம்பெற்றது.

பி.ப. 2 மணியளவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் மருத்துவ பீட தமிழ் மாணவர்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை - முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மருத்துவபீடத்தினுள் வெசாக் கொண்டாட்டம் பிக்கு மற்றும் இராணுவத்தினரின் பங்கேற்புடன் இடம்பெற்றமை பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஔ.125)

## குடும்பப்பெண்...

புணர்வுக்குட்படுத்த 'பூட்ஸ்டன்' வந்த இருவர் முயற்சித்தபோதும், அவர்களைக் கடித்துவிட்டு அந்தப்பெண் அங்கிருந்து தப்பியுள்ளார்.

கொக்கிளாய், திருகோணமலை வீதியில் மணலாற்றுக்கு அருகே உள்ள இராணுவ காவலரணுக்கு அண்மையாக இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இந்த வீதியில் தற்போது கண்ணிவெடி அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அங்கு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 32 வயதான பெண்ணை முகத்தை துணியால் மூடிக் கட்டியவாறு 'பூட்ஸ்டன்' வந்த இருவர் அருகிலிருந்த காட்டுக்குள் சுமார் 50 மீற்றர் தூரம் இழுத்துச் சென்றுள்ளனர். பெண்ணின் ஆடைகளைக்களைந்துவன் புணர்வுக்கு உட்படுத்த முயன்றபோது, அவர்கள் இருவரினதும் கைகளைக் கடித்துவிட்டு அவர் அங்கிருந்து தப்பி ஓடிவந்துள்ளார். காட்டுக்குள்ளிருந்து பிரதான வீதியின் கரைக்குவந்து 'வேக்கியில்' ஏனைய பணியாளர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அவரை மீட்டுமுல்லைத்தீவுமாவட்ட மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

சட்டமருத்துவ நிபுணர் க.வாசுதேவா மருத்துவப் பரிசோதனைகளை முன்னெடுத்தார். பெண் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்று மருத்துவப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-ஔ.5)

## முள்ளிவாய்க்கால்...

போக்குவரத்துப் பொலிஸாருக்கு எதிராக உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 10ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் கஞ்சி வழங்கல் இடம்பெற்றபோது யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் பயணிப்பவர்களுக்கு ஏற்பாட்டாளர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வீதியில் பயணித்த கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரும் பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியை சிரட்டையில் பெற்றுக் குடித்தனர். இந்த ஒளிப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்தன. பின்னர் அவை சிங்கள ஊடகங்களிலும் வெளிவந்தன. இதனைத் தொடர்ந்தே இரண்டு பொலிஸார் மீதும் விசாரணையை மேற்கொள்ளுமாறு கொழும்பிலிருந்து தகவல் வழங்கப்பட்டு அவர்கள் மீது உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ-ஔ.214)

## உருத்திரபுரீஸ்வர...

களை ஏற்றுக்கொள்ளமுடியாது - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் அமைந்துள்ள உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் நேற்று இடம்பெற்றது. இங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே சுகாஷ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் நாளைமறுதினம் 18ஆம் திகதியன்று தொல்லியல் திணைக்களம் அளவீட்டுப் பணிகளுக்காக வரவுள்ளது. எந்தவொரு வகையிலும் இது ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது அனுமதிக்கப்படவோ முடியாத விடயம்.

ஏழு ஈச்சரங்களில் ஒன்று கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரம். சோழர் காலத்துக்கு முற்பட்ட நாகர் காலத்திலிருந்து தமிழ் மக்களாலும், சைவ மக்களாலும் வழிபட்டு வரப்பட்ட புனிதமான பிரதேசம். சைவ ஆலயச் சூழலில் தொல்லியல் திணைக்களம் அளவீட்டுப் பணிகளுக்காக வருவதாக அறிவித்திருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழ் மக்களுடைய இனத்துவ அடையாளங்களைக் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு ரீதியில் தொடர்ந்து அழித்து வருகின்ற சிங்கள - பௌத்த பேரினவாத அரசு, அதனுடைய இன்னுமொரு பரிணாமமாக கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் கைவைப்பதாகநாங்கள் உணருகின்றோம்.

அளவீட்டுக்காக மே மாதம் 18ஆம் திகதியைத் தெரிவுசெய்திருப்பது தொல்லியல் திணைக்களத்தினுடைய மிலேச்சத்தனமான செயற்பாட்டை வெளிப்படுத்துகின்றது. தமிழ் இனப்படுகொலை உச்சம் பெற்ற முள்ளிவாய்க்காலில் வீச்சுப் பெற்ற மே மாதம் 18ஆம் திகதியை உலகத்தமிழ் மக்களும், ஈழத் தமிழ் மக்களும் இனப்படுகொலை நாளாகக் கடைப்பிடித்து வருகின்றார்கள். அந்தப் புனிதமான நெஞ்சுருக்குகின்ற நாளில் தமிழ் மக்கள் எல்லோரும் முள்ளிவாய்க்காலில் ஒன்று கூடுவார்கள். அப்போது அனைவரது கண்களும் அங்கு திரும்பும் எனத் துல்லியமாகக் கணித்த தொல்லியல் திணைக்களம் அந்த நாளை அளவீட்டுப் பணிக்காகக் குறித்துள்ளது.

தொல்லியல் திணைக்களத்தை பௌத்த ஆக்கிரமிப்புத் திணைக்களமாகச் செயற்படவேண்டாம் என்று கோருகின்றோம். இது தமிழ் மக்களுடைய வழிபாட்டுத் தலம். தொல்லியல் திணைக்களம் தமது செயற்பாட்டை உடனடியாகக் கைவிட வேண்டும். அதேவேளை, மாவட்டம் கடந்து குறித்த செயற்பாட்டைக் கண்டிப்பதற்காக அனைவரும் நாளைமறுதினம் ஆலய வளாகத்தில் கூடி எமது எதிர்ப்பை வெளியிடுவதுடன், அளவீட்டைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்று கூடவேண்டும் - என்றார்.

இந்தச் சந்திப்பில் ஆலய நிர்வாகத் தலைவர் நா.பசுபதிப்பிள்ளை, கட்சியின் மாவட்ட இளைஞர் அணித் தலைவர் சுதர்சன் ஆகியோரும் பங்கேற்றனர். (அ-ஔ.113)

## மூன்று...

ரணில் விக்கிரமசிங்கவால் பதவி நீக்கப்பட்டுள்ளனர். புதிய ஆளுநர்கள் நாளை புதன்கிழமை நியமிக்கப்படுவர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோரே பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் முன்னாள் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆளுநர்களை தாமாக பதவி விலகுமாறு கோரியிருந்தார். ஆனால், அதனைச் சவாலுக்குட்படுத்தும் வகையில் ஆளுநர்கள் செயற்பட முனைந்திருந்த நிலையில் நேற்றையதினம் மூவரையும் பதவியிலிருந்து ஜனாதிபதி நீக்கியுள்ளார்.

இதேவேளை - வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னைய ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நியமிக்கப்படக் கூடும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஔ.5)

## குளவி...

பிள்ளைகள் உள்ளனர். வீட்டின் பின்புறத்தில் துப்பரவுப்பணியில் இவர் ஈடுபட்டிருந்தபோது குளவி கொட்டியுள்ளது. காயமடைந்த அவர் நயினாதீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். (அ-ஔ.5.26.125)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்கள் தேவையில்லை நல்லவற்றுக்கு ஆதரவளிப்போம்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, மே 16**



**எதிர்க்கட்சியாக, அரச தரப்பிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினாலும், முற்போக்கு அரசியல் கட்டமைப்பில் சாதகமான நல்லவை நடக்கும்போது, அதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. எனவே அமைச்சுக்களைப் பெறாமல், அரசின் நல்ல திட்டங்களை ஆதரிப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் பிரதிநிதிகளுக்கான பரிச்சயப்படுத்தல் செயலமர்வில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஜனநாயகக் கட்டமைப்பில் நிறைவேற்று அதிகாரம், சட்டமன்றம் மற்றும் நீதித்துறை ஆகிய முத்தரப்புகளின் ஆளுகை ஏற்கப்பட வேண்டும். இதில் அதிகாரம் பகிரப்படுவதாக இருக்கவேண்டும். இம்மூன்று நிறுவனங்களுக்கு இடையே தடைகளும் சமன்பாடுகளும் இருப்பது மிகவும் முக்கியமானது. 17 துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் 530 இளைஞர்கள் பங்கேற்பது இந்தத் தடைகள் மற்றும் சமன்பாட்டுச் செயற் முறையை முறையாகச் செயற்படுத்துவதற்கே.

கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் நிலைப்பாடுகள் என நாம் வெவ்வேறு பக்கங்களில் இருந்தாலும் நாட்டின் பொதுக் கடமைக்காக ஒன்றுபட வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாட்டுக்கு பெறுமானம் சேர்ப்பதானதே தவிர இது பட்டம் பதவிகளை பகிர்ந்து கொள்வதற்காக அல்ல. இவ்வாறு எடுக்கப்பட்ட இந்த உகந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்கு நிபந்தனையற்ற ஆதரவை எதிர்க்கட்சி வழங்கும் - என்றார். (ம)

# டொலரைப் பெறும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை!

## தம்மிக்க எம்.பி. குற்றச்சாட்டு

டொலரைக் கொண்டுவருவதற்கான நிலையான பாதையை இலங்கை இன்னும் உருவாக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் நிலவும் வரி நெருக்கடிக்கு டொலர் பற்றாக்குறையே காரணம். டொலர் பற்றாக்குறை காரணமாக, இலங்கையின் இறக்குமதிகள் கணிசமான அளவு குறைந்துள்ளன. அதனால் சுங்க வரி மற்றும் ஏனைய வரிகள் மூலம் ஈட்டப்படும் வருமானம் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சுங்கவரிகள் மற்றும் வரிகளில் இருந்து இழந்த பணத்தை சம்பாதிப்பதற்காக, ஏனைய வரிகள் அதிகரிக்கப்படுகின்றன. இதற்குப் பின்னால் உள்ள அடிப்படைப் பிரச்சினை டொலர் பற்றாக்குறையாகும். டொலரைச் சம்பாதிக்க இன்னும் சரியான வழியை இலங்கை தேடவில்லை - என்றார். (எ-இ)



தெல்லிப்பழை வீணாக்கடவை காசி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை காலை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது. (ம-66)

# உற்பத்தி வீழ்ச்சி மரக்கறிகளின் விலை மும்மடங்கு அதிகரிப்பு

நாட்டில் மரக்கறிகளின் விலை மும்மடங்காக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேவையானளவு மரக்கறிகள் இந்தமாதம் சந்தைக்குக் கிடைக்கப்பெறாமையே விலையுயர்வுக்கு காரணம் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இந்தமாதம் மரக்கறிகளின் உற்பத்தியில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதுடன் மழை காரணமாக ஏராளமான மரக்கறிகள் அழிவடைந்துள்ளன. அதனால் மரக்கறிகளின் விலை மேலும் உயர்வடையச் சாத்தியம் உள்ளது என்று வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)

# ஜனகவை பதவிவிலக்கும் பிரேரணை நாடாளுமன்றில்

## 24ஆம் திகதியில் விவாதம்

கொழும்பு, மே 16

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. அது தொடர்பான பிரேரணை எதிர்வரும் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான கட்சித் தலைவர்கள் கூட்டம் கடந்தவாரம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

அதிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க 2022ஆம் ஆண்டு 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் தலைவர் மற்றும் உறுப்பினராகத் தொடர்ந்தும் செயற்படுவதற்குப் பொருத்தமற்றவர் என நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கடந்த ஏப்ரல் 18ஆம் திகதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனக ரத்நாயக்கவை அதன் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை அனுமதிக்கப்படவேண்டும் என நாடாளுமன்ற புதிய ஒழுங்குப் புத்தகத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# சகோதரியின் வீட்டுக்கு தீ!

## இளைஞர் கைது

கொழும்பு, மே 16

சகோதரியின் வீட்டுக்குத் தீ வைத்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நிட்டம்புவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வத்துபிட்டிவல ருக்கவில பிரதேசத்தை சேர்ந்த 23 வயதானவரே கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவத்தில் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. சகோதரியின் பிள்ளையினது பாடசாலை புத்தகங்கள், சீருடைகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)


**தேவை**

மென்பான விற்பனைக்கு விற்பனைப் பிரதிநிதியும் அனுபவம் உள்ள களஞ்சியக் காப்பாளரும் தேவை. **077 77 222 15** (CS 24879)A-1

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பான்சி ஹவுஸ் (Bag) கடைக்கு வேலையாட்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**077 13 24 319** (CS 24880)A-1

**அலுவலக உதவியாளர் தேவை**

சிறந்த அனுபவம் வாய்ந்த அலுவலக உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- தகைமைகள் - க.பொ.த.உயர்தரம். கணினி அனுபவம் தேவை.
- முகவரி- இல 108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு: - 077-528 4567, 077-592 5088 - 021-222 8680

**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் கீரிமலையில் 84 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
* கீரிமலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* கீரிமலை சிவன் கோயில் (நகுலேஸ்வரர்) இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* காணியின் வடக்கு எல்லை கடல், தெற்கு எல்லை பிரதான காப்பற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
* ஒரு பரபப்பின் விலை - பத்து இலட்சம் ரூபாய். (1000000/=)



**தொடர்பு: 076 911 9371 076 7390 413 077 8748 135**

(CS 24846) A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செய்தி : 021 483 0000 - விளம்பரம் : 021-483 1111 ... advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.